# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 342 /பேரூ/2025**

**நாள் : 09.06.2026**

P. பாண்டியன்,
க. புதுப்பட்டி,
தேனி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
க. புதுப்பட்டி பேரூராட்சி,
தேனி மாவட்டம். - எதிர் மனுதாரர்

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், க. புதுப்பட்டி, 35A/9, மாதரி தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. P. பாண்டியன் என்பவரது 02.09.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.09.2025 அன்று பெறப்பட்டு, 342/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், க. புதுப்பட்டி, 35A/9, மாதரி தெரு என்ற முகவரியில் வசிக்கும் மனுதாரர் திரு. P. பாண்டியன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 02.09.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

“தேனி மாவட்டம், க. புதுப்பட்டி பேரூராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 19.06.2023ஆம் தேதியன்று பணியிடை காலமான திருமதி பா. வெள்ளையம்மாள் என்பவரின் கணவரும் வாரிசுதாரருமான பா. பாண்டியன் ஆகிய எனக்கு சேர வேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் சந்தா மற்றும் வட்டி தொகையினை வழங்க கேட்டு உரிய சான்றாவணங்களுடன் 07.10.2023ஆம் தேதியன்று விண்ணப்பம் செய்தேன். விண்ணப்பத்தினை பெற்றுக்கொண்டு க. புதுப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர், முதன்மை செயலாளர், கருவூலங்கள் மற்றும் கணக்கர் ஆணையர், CPS செல், சென்னை அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தார். அங்கிருந்து குறைபாடுகள் சம்பந்தமாக குறைகளை சரி செய்து மீள அனுப்பி வைக்கும்படி க. புதுப்பட்டி செயல் அலுவலருக்கு கருத்துரு திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட விபரத்தினை சென்னையில் உள்ள

முதன்மை செயலாளர், கருவூலங்கள் மற்றும் கணக்கர் அலுவலகத்தில் நான் நேரில் சென்று தெரிந்து கொண்டு வந்த பின்பு க. புதுப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு, நான் அனுப்பிய 10.02.2025 நாளிட்ட கடிதத்தின்படி எனக்கு சேர வேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் சந்தா மற்றும் வட்டி தொகைக்கான கருத்துருவினை தயார் செய்து உரிய சான்றாவணங்களுடன் சம்பந்தப்பட்ட CPS Cell Govt. Data Centre அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதில் குறைகள் கண்டறியப்பட்டு அதனை சரி செய்து மீள அனுப்பி வைக்க சம்பந்தப்பட்ட க. புதுப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொண்டேன்.

ஆனால் அவர் இதுநாள் வரையிலும் குறைகளை சரி செய்து சம்பந்தப்பட்ட சென்னை CPS Data Centre அலுவலகத்திற்கு எனக்கு கிடைக்க வேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் சந்தா மற்றும் வட்டி தொகைக்கான குறைபாடுகளை சரி செய்து மீள அனுப்பி வைக்காமல் காலதாமதம் செய்து வருகிறார். அதனால் எனக்கு உரிய காலத்தில் கிடைக்க வேண்டிய ஓய்வூதிய பங்களிப்பு மற்றும் வட்டி தொகை கிடைக்காமல் நான் குடும்ப செலவிற்கு வட்டிக்கு பணம் வாங்கி செலவு செய்யும் நிலைக்கு ஆளாக்கியுள்ளார்கள். இந்த இழப்பை ஏற்படுத்திய க. புதுப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் இளங்கோவன் மற்றும் இளநிலை உதவியாளர் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை மேற்கொண்டு ஓய்வூதிய பங்களிப்பு சந்தா தொகை மற்றும் வட்டி தொகை கிடைக்க உதவி செய்யும்படியும், மேற்படி நபர்களால் எனக்கு ஏற்பட்ட இழப்பிற்கு இழப்பீட்டு தொகை அவர்களிடமிருந்து பெற்றுத் தரும்படியும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 17.10.2025 நாளிட்ட அறிவிப்பின் மூலம் க. புதுப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. க. புதுப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 04.11.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 169/2024ல் கீழ்க்கண்டவாறு மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே தனது விளக்கத்தை அளித்துள்ளார்.

"க. புதுப்பட்டி பேரூராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து பணியிடையே காலமான தூய்மை பணியாளர் திருமதி. பா. வெள்ளையம்மாள் என்பவரின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட பங்களிப்பு ஓய்வூதிய சந்தா மற்றும் வட்டித் தொகையினை அவரது வாரிசுதாரரும் கணவருமான திரு. ப. பாண்டியன் என்பவருக்கு வழங்கிட 16.05.2024 நாளிட்ட பங்களிப்பு ஓய்வூதிய கருத்துரு கருவூலக கணக்கு ஆணையர் (ப.ஓ.தி. பிரிவு) சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, கருவூலக கணக்கு ஆணையர் (ப.ஓ.தி. பிரிவு) சென்னை அவர்களின் 02.09.2024 நாளிட்ட கடிதம் ந.க. எண். 2310991/ப.ஓ.தி./2024ல் இப்பேரூராட்சி மூலம் அனுப்பப்பட்ட கருத்துருவில் உள்ள குறைகளை சரி செய்து மீள சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டது. அதன்படி, வரிசை எண். 8 மற்றும் 9ல் சுட்டிகாட்டப்பட்டுள்ள குறைகளை தவிர்த்து மற்ற குறைகள் சரி செய்யப்பட்டது. மேலும் வரிசை எண்.8ல் 3/2022 முதல் 5/2023 வரை ஒவ்வொரு மாதங்களின் பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் சந்தா பிடித்த விபரங்களுடன் விடுதலின்றி இணையதளத்தின் வாயிலாக பதிவேற்றம் செய்யப்பட்டு உள்ளாட்சி நிதித் துறையினரால் தணிக்கை செய்து அனுப்பப்பட்டுவிட்டது என்ற சான்றொப்பத்துடன் அனுப்பப்பட வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதன்படி, காலமான தூய்மை பணியாளர் திருமதி. பா. வெள்ளையம்மாள் என்பவர் ஊதியத்தில் 3/2022 முதல் 5/2023 வரை பிடித்தம் செய்யப்பட்டு செலுத்தப்பட்ட விவரம் உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டதில் பிடித்தங்கள் தவறான கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. மாவட்ட கருவூலகத்தில் தவறாக செலுத்தப்பட்ட கணக்கு தலைப்பினை சரிசெய்திட க. புதுப்பட்டி பேரூராட்சி அலுவலக 21.05.2024 நாளிட்ட கடிதம் ந.க.எண். 169/2024 மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால் சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளாத காரணத்தினால் பேரூராட்சி அலுவலக 29.10.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண். 169/2024ன்படி சரி செய்திட கடிதம் அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கணக்கு தலைப்பு சரி செய்யப்படும் பட்சத்தில் மனுதாரருக்கு பங்களிப்பு ஓய்வூதிய சந்தா மற்றும் வட்டித் தொகை வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவர அறிக்கை பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

3. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான க. புதுப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு இம்முறைமன்றத்தில் 17.12.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 01.12.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரரான திரு. P. பாண்டியன் மற்றும் இந்திய குடியரசு தொழிலாளர் தொழிற்சங்க மாநில துணைச் செயலாளர் திரு. நா. ஜெகநாதன் ஆகியோர் 17.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தங்களது வாக்கு மூலத்தை அளித்துள்ளனர். அதில் –

- தேனி மாவட்டம், க. புதுப்பட்டி பேரூராட்சியில் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்து வந்த எனது மனைவி திருமதி. பா. வெள்ளையம்மாள் என்பவர் 19.06.2023 அன்று பணியிடை காலத்தில் காலமானதை தொடர்ந்து அவருக்கு சேர வேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய தொகை மற்றும் வட்டித் தொகை வழங்கக் கோரி நான் 07.10.2023 அன்று பேரூராட்சி செயல் அலுவலரிடம் மனு செய்தேன்.

- பங்களிப்பு ஓய்வூதிய பணப் பலன்களை வழங்குவதற்காக கருத்துரு பேரூராட்சி செயல் அலுவலரால் 16.05.2024 அன்று கருவூலங்கள் மற்றும் கணக்காயர் ஆணையருக்கு அனுப்பப்பட்டதில், அக்கருத்துருவில் சில குறைபாடுகள் சுட்டிக்காட்டி அதை நிவர்த்தி செய்து திருப்பி அனுப்புமாறு ஆணையரகத்தால் கேட்டுக் கொள்ளப்பட்டது.
- அதன்படி பேரூராட்சி செயல் அலுவலரால் 10.02.2025 நாளிட்ட திருத்திய கருத்துரு அனுப்பப்பட்டதில், அதிலும் குறைகள் கண்டறியப்பட்டு அதனை சரி செய்து மீள அனுப்பி வைக்குமாறு கருவூலகங்கள் மற்றும் கணக்கர் ஆணையரகம் தெரிவித்திருந்தது.

- இந்நிலையில் கடந்த 3 ஆண்டுகளாக பேரூராட்சி செயல் அலுவலர் குறைகளை நிவர்த்தி செய்து உரிய கருத்துரு சமர்ப்பிக்காமல் இருப்பதால், எனக்கு சேர வேண்டிய ஓய்வூதிய பலன்கள் கிடைக்காமல் எனது குடும்பம் ஏழ்மை நிலையில் உள்ளது. வறுமையில் வாடும் எனது குடும்ப சூழ்நிலையை கருத்திற்கொண்டு எனக்கு சேர வேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய பணப்பலன்களை விரைவில் கிடைத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.
- 3 ஆண்டுகாலமாக ஓய்வூதிய பணப்பயன்களை வழங்குவதற்கு காலதாமதம் செய்த சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்திடவும் மற்றும் இதற்கான இழப்பீடு தொகையை வழங்கிடவும் ஆவன செய்யுமாறு

இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

5. எதிர்மனுதாரரான க. புதுப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் 17.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- தேனி மாவட்டம், க. புதுப்பட்டி பேரூராட்சியில் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்து, பணியிடையில் காலமான திருமதி பா. வெள்ளையம்மாள் என்பவருக்கு வழங்கப்பட வேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய சந்தா மற்றும் வட்டித் தொகை ஆகியவை வழங்கிடும் வகையில் உரிய கருத்துரு சென்னை கருவூல கணக்கு ஆணையருக்கு 16.05.2024 அனுப்பப்பட்டதில், இதில் சில குறைபாடுகள் சுட்டிக்காட்டி அதில் ஒன்றான 03/2022 முதல் 05/2023 வரை திருமதி. பா. வெள்ளையம்மாள் என்பவருக்கு பங்களிப்பு ஓய்வூதிய திட்ட சந்தா தொகை எவ்வித விடுதலின்றி செலுத்தியதற்கான தணிக்கைச் சான்றிதழ் சமர்ப்பிக்க கோரப்பட்டது. கருவூல கணக்கு ஆணையர் தெரிவித்துள்ள குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

- மேற்காணும் தணிக்கை துறை சான்றினை பெற திருமதி. பா. வெள்ளையம்மாள் என்பவரின் ஊதியத்தில் 03/2022 முதல் 05/2023 பிடித்தம் செய்த விவரம் உள்ளாட்சி நிதி தணிக்கை துறையிடம் கலந்தாலோசிக்கப்பட்டதில் தவறான கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

- மேற்காணும் தவறாக பங்களிப்பு தொகை செலுத்திய காலத்தில் பணிபுரிந்த செயல் அலுவலர் திரு. கோ. சுப்பிரமணியன் என்பவராவார். இவர் தற்போது தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறார்.

- தவறான கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்ட தொகையை சரி செய்யக் கோரி தேனி மாவட்ட கருவூல அலுவலருக்கு பேரூராட்சி அலுவலக கடித நாள் 21.05.2024 மற்றும் 29.10.2025 அனுப்பப்பட்டுள்ளது.

- மேற்படி கணக்கு தலைப்பு சரி செய்தவுடன் மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய தொகை வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பணிவுடன் இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

- மனுதாரருக்கு தவறாக வழங்கிய கணக்குத் தலைப்பு தொகையினை சரியான கணக்குத் தலைப்பிற்கு மாற்றி 31.01.2026 தேதிக்குள் முடித்துக்கொடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

- கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்வதற்கு அரசிடமிருந்து ஆணை பெற்றவுடன் மனுதாரருக்கு பணி நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. இதனைத் தொடர்ந்து எதிர்மனுதாரரான க. புதுப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர், மேற்படி வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி, 31.01.2026 தேதிக்குள் மனுதாரருக்கு பங்களிப்பு ஓய்வூதிய சந்தா தொகை மற்றும் வட்டித் தொகையினை ஒப்பளிப்பு செய்வதை உறுதி செய்திடும் வகையில் எதிர்மனுதாரரான க. புதுப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரை மட்டும் இம்முறைமன்ற நடுவத்தில் 07.04.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.03.2026 நாளிட்ட அழைப்பாணை எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்டு அதன் நகல் மனுதாரருக்கும் அனுப்பப்பட்டது.

7. மனுதாரர் திரு. P. பாண்டியன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 07.04.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில்

- தேனி மாவட்டம், க. புதுப்பட்டி பேரூராட்சியில் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்து வந்த எனது மனைவி திருமதி. பா. வெள்ளையம்மாள் என்பவர் 19.06.2023 அன்று பணியிடை காலத்தில் காலமானதை தொடர்ந்து அவருக்கு சேர வேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய தொகை மற்றும் வட்டித் தொகை வழங்கக் கோரி நான் 07.10.2023 அன்று பேரூராட்சி செயல் அலுவலரிடம் மனு செய்தேன்.

- ஆனால் எனக்கு சேர வேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய மற்றும் வட்டித் தொகை மூன்று வருடங்களுக்கு மேல் பேரூராட்சி செயல் அலுவலரால் வழங்கப்படாததால் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த முறையீட்டு மனு எண். 342/பேரூ./2025 தொடர்பாக 17.12.2025 அன்று மேற்காணும் தொகை மற்றும் காலதாமதம் ஏற்படுத்தியதற்காக இழப்பீடு தொகை வழங்கிட வேண்டியும் மற்றும் சந்தா மற்றும் வட்டித் தொகையை தவறான கணக்கில் செலுத்தி காலதாமதம் ஏற்படுத்திய உரிய அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரியும் வாக்குமூலம் சமர்ப்பித்தேன்.

- 17.12.2025 அன்றைய விசாரணையில் பேரூராட்சி செயல் அலுவலர் தவறாக வழங்கிய கணக்குத் தலைப்பு தொகையினை சரியான கணக்குத் தலைப்பிற்கு மாற்றி 31.01.2026க்குள் மனுதாரருக்கு முடித்துக் கொடுக்கப்படுமென செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்தார்.

- பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி 31.01.2026க்குள் எனக்கு சேர வேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய தொகை மற்றும் வட்டித் தொகை இந்நாள்வரை வழங்கப்படவில்லை. ஏற்கனவே எனக்கு சேர வேண்டிய தொகையானது 3 ஆண்டுகளுக்கு மேல் காலதமாதமாகி உள்ள நிலையிலும், மேற்கொண்டும் தாமதப்படுத்தி வருவது நான் பொருளாதாரத்திலும் மற்றும் மன ரீதியாகவும் மிகுந்த உளைச்சலுக்கு ஆளாகியுள்ளேன்.

- எனவே வறுமையில் வாடும் எனது குடும்ப சூழ்நிலையை கருத்தில்கொண்டு எனக்கு சேர வேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய சந்தா தொகை, வட்டித் தொகை ஆகியவை மற்றும் அதற்கான இழப்பீட்டுத் தொகையினை வழங்கிட மேலும் காலதாமதமின்றி உடனடியாக வழங்குவதற்கும் மற்றும் தவறான கணக்குத் தலைப்பினை செலுத்திய உரிய அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

8. எதிர்மனுதாரரான க. புதுப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் 07.04.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- "தேனி மாவட்டம், க. புதுப்பட்டி பேரூராட்சியில் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்து, பணியிடையில் காலமான திருமதி பா. வெள்ளையம்மாள் என்பவருக்கு வழங்கப்பட வேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய சந்தா மற்றும் வட்டித் தொகை ஆகியவை வழங்கிட கோரி 17.12.2025 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் அப்போதைய செயல் அலுவலர் மனுதாரருக்கு தவறாக வழங்கிய கணக்குத் தலைப்பு தொகையினை சரியான கணக்குத் தலைப்பிற்கு மாற்றி 31.01.2026ம் தேதிக்குள் முடித்துக்கொடுக்கப்படும் என தனது வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தார்.

- மாநில தலைமை கணக்காயர் அவர்களின் 28.01.2026ம் நாளிட்ட கடிதத்தில் பங்களிப்பு ஓய்வூதிய திட்ட சந்தா மற்றும் வட்டித் தொகையினை தவறான கணக்கில் செலுத்தப்பட்டதை சரியான கணக்கு தலைப்பில் மாற்றம் செய்திட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

- இதனைத் தொடர்ந்து தேனி மாவட்ட கருவூலக அலுவலருக்கு க. புதுப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் 02.02.2026 தேதியிட்ட கடிதத்தில் மாநில தலைமை கணக்காயர் ஒப்புதலானது அனுப்பப்பட்டது. அதன்படி மாவட்ட கருவூலக அலுவலரால் 11.02.2026 நாளிட்ட கடிதத்தின் மூலம் உத்தமபாளையம் உதவி கருவூலக அலுவலருக்கு பணம் பெற்று வழங்கும் அலுவலர் மூலம் கணக்கு தலைப்பினை சரி செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

- இந்நிலையில் மனுதாரரின் குடும்ப சூழ்நிலையை கருத்தில்கொண்டு அவருக்கு சேர வேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய திட்ட சந்தா மற்றும் வட்டித் தொகை விரைவாக கிடைக்க வேண்டி க. புதுப்பட்டி செயல் அலுவலரது 10.03.2026 மற்றும் 18.03.2026 நாளிட்ட கடிதங்கள் மூலம் உதவி கருவூலக அலுவலரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

- மேற்காணும் நிலையில், உதவி கருவூலக அலுவலரால் பங்களிப்பு ஓய்வூதிய திட்ட சந்தா மற்றும் வட்டித் தொகை தொடர்பான கணக்குத் தலைப்பினை 1 மாத காலத்திற்குள் சரி செய்து கொடுக்கப்படும் என 25.03.2026 அன்று தெரிவித்துள்ளார்.

- இருப்பினும் மனுதாரரின் குடும்ப சூழ்நிலை கருத்தில்கொண்டு அவருக்கு சேர வேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய திட்ட சந்தா மற்றும் வட்டித் தொகை எவ்வித காலதாமதமின்றி விரைவில் வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொண்டு 1 மாத காலத்திற்குள் மனுதாரருக்கு சேர வேண்டிய பங்களிப்பு தொகை கிடைத்திட ஆவன செய்யப்படும் எனவும் 15 தினங்களுக்குள் நடவடிக்கை விபரங்களை இம்முறை மன்றத்திற்கு அறிக்கையாக சமர்ப்பிக்கின்றேன் எனவும் இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

9. இம்முறைமன்ற நடுவத்தில் 07.04.2026 அன்று நடைபெற்ற விசாரணையின் போது எதிர்மனுதாரரான க. புதுப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி, மனுதாரருக்கு சேர வேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய திட்ட சந்தா மற்றும் வட்டித் தொகை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தனது 21.04.2026 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 169/2024ல் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"தவறுதலாக செலுத்தப்பட்ட தொகையின் கணக்கு தலைப்பினை மாற்ற க. புதுப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மாநிலக் கணக்காயர் சென்னை அவர்களால் 28/01/2026 அன்று கணக்கு தலைப்பினை மாற்றிட ஒப்புதல் வழங்கப்பட்டது.

தேனி மாவட்ட கருவூல அலுவலரால் 11.02.2026 நாளிட்ட கடித எண். 2157811/2025/இ1ல் தொடர்புடைய சார்நிலை கருவூல அலுவலர் மட்டுமே கணக்கு தலைப்பினை மாற்ற இயலும் என தெரிவிக்கப்பட்டது.

க. புதுப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் 10.03.2026 மற்றும் 18.03.2026 நாளிட்ட கடிதத்தில் கணக்குத் தலைப்பினை மாற்ற விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தமபாளையம் உதவிக் கருவூல அலுவலரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

25.03.2026 நாளிட்ட உத்தமபாளையம் சார்நிலை கருவூல பட்டியல்களின்படி சார்நிலை கருவூலத்தால் சரியான கணக்கு தலைப்பிற்கு மாற்றம் செய்யப்பட்டு செலுத்தப்பட்ட பங்களிப்பு ஓய்வூதிய சந்தா தொகை உரிய பணியாளரின் கணக்கிற்கு கொண்டு சென்று 1 மாத காலத்திற்குள் சரி செய்திட தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கணக்கு தலைப்பு சரி செய்யப்பட்டு, உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை அவர்களுக்கு பேரூராட்சி செயல் அலுவலரின் 21.04.2026 நாளிட்ட கடித ந.க.எண். 169/2024 மூலம் ஒத்திசைவு சான்று பெற உரிய படிவத்தில் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்ற விவரமானது மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

10. மனுதாரரின் புகார் மனு. வாக்குமூலங்கள் மற்றும் எதிர்மனுதாரரான க. புதுப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கைகள் மற்றும் வாக்குமூலங்கள் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் திரு. P. பாண்டியன் என்பவர் தனது 02.09.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் தேனி மாவட்டம், க. புதுப்பட்டி பேரூராட்சியில் தூய்மை பணியாளராக பணியாற்றிய தனது மனைவி திருமதி. பா. வெள்ளையம்மாள் என்பவர் 19.06.2023 அன்று பணியிடை காலமானதை தொடர்ந்து அவருக்கு சேர வேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய சந்தா தொகை மற்றும் வட்டி தொகை ஆகியவை ஒப்பளிப்பு செய்வதற்கு பேரூராட்சி செயல் அலுவலர் காலதாமதம் செய்வதாக புகார் தெரிவித்திருப்பது அறிய வருகிறது.

தேனி மாவட்டம், க. புதுப்பட்டி பேரூராட்சியில் துப்புரவு பணியாளரான திருமதி. பா. வெள்ளையம்மாள் என்பவர் 19.06.2023 அன்று பணியிடையில் காலமானதை தொடர்ந்து அவருக்கு சேர வேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய சந்தா தொகை மற்றும் வட்டி தொகை ஆகியவற்றை வழங்கிட பேரூராட்சி செயல் அலுவலரால் 16.05.2024 நாளிட்ட கருத்துரு சென்னை கருவூல கணக்கு ஆணையருக்கு அனுப்பப்பட்டது என்பதும் இக்கருத்துருவில் சில குறைபாடுகள் சுட்டிகாட்டி அதில் குறிப்பாக 03/2022 முதல் 05/2023 வரையிலான காலத்திற்கு திருமதி. பா. வெள்ளையம்மாள் என்பவருக்கு செலுத்தப்பட்ட சந்தா தொகை எவ்வித விடுதலின்றி செலுத்தியதற்கான தணிக்கை சான்றுடன் சமர்ப்பிக்குமாறு கருவூல கணக்கு ஆணையரால் கோரப்பட்டது என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மூலம் தெரிய வருகிறது.

இதனைத் தொடர்ந்து, உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையிடம் கலந்து ஆலோசிக்கப்பட்டதில் திருமதி. பா. வெள்ளையம்மாள் என்பவரின் ஊதியத்தில் 03/2022 முதல் 05/2023 வரை பிடித்தம் செய்யப்பட்ட தொகையானது தவறான கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, பேரூராட்சி செயல் அலுவலரால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 28.01.2026 நாளிட்ட கடிதத்தில் சென்னை மாநில கணக்காயர் அவர்களால் கணக்கு தலைப்பினை மாற்றிட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்பதும் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மூலமாகவும் அறிய வருகிறது.

மேலும், தேனி மாவட்ட கருவூல அலுவலரின் 11.02.2026 நாளிட்ட கடிதத்தில் தொடர்புடைய சார்நிலை கருவூல அலுவலர் மட்டுமே கணக்கு தலைப்பினை மாற்ற இயலும் என தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, சரியான கணக்கு தலைப்பிற்கு மாற்றம் செய்யப்பட்டு, இதற்கான ஒத்திசைவு சான்று பெற உரிய படிவத்தினை உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் உதவி இயக்குநருக்கு 21.04.2026 நாளிட்ட கடிதம் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதும் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை வாயிலாக அறிய முடிகிறது.

மேற்காணும் நிலையில், தேனி மாவட்டம், க. புதுப்பட்டி பேரூராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 19.06.2023 அன்று பணியிடையில் காலமான திருமதி. பா. வெள்ளையம்மாள் என்பவருக்கு உரிய விதிகளின்படி சேர வேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய சந்தா தொகை மற்றும் வட்டி தொகையினை ஒரு மாத காலத்திற்குள் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு க. புதுப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. இது சம்பந்தமான அறிக்கையினை ஒரு மாத காலத்திற்குள் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்ப வேண்டும்.

2026-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 09 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. P. பாண்டியன்,
35A/9, மாதரி தெரு, க. புதுப்பட்டி,
உத்தமபாளையம் வட்டம், தேனி மாவட்டம் - 625 556.
2. செயல் அலுவலர்,
க. புதுப்பட்டி பேரூராட்சி, தேனி மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–28.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர் 11/6/26

சென்னை–600 032